DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : கண்ணன் | Father/Husband Name : வெங்கடாச்சலபதி |
| Age : 42 | Village : வெற்றிலையூரணி |
| Taluk : | Calling : பிரிண்டிங் பிரஸ் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Nov 4, 2025 4:37 PM

(Accused Present)

**<u>முதல் விசாரணை</u> :–**

1. நான் வெற்றிலையூரணியில் குடியிருந்து வருகிறேன். பிரிண்டிங் பிரஸ்ஸில் வேலை செய்து வருகிறேன்.

2. அ.சா.1 எனது அத்தை ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது ஊர்க்காரர் ஆவார். கடந்த 18.07.2019 ம் தேதி இரவு நான் சிவகாசியில் உள்ள சுதா பிரிண்டிங் பிரஸ்ஸில் வேலை செய்து கொண்டிருந்தபோது சுமார் 09.30 மணியளவில் எனது மனைவி சசிகலா எனக்கு போன் செய்து அவரது பாட்டிக்கு உடம்பு சரியில்லாத காரணத்தினால் எனது பாட்டியை எனது மனைவியும், எனது மைத்துனர் சிவாவும் சிவகாசியில் உள்ள விஜயா நர்சிங் ஹோம்மிற்கு அழைத்து சென்றிருப்பதாக தகவல் கூறினார். பின்னர் நான் எனது பிரிண்டிங் பிரஸ்ஸிலிருந்து கிளம்பி மருத்துவமனை சென்றேன். எனது பாட்டியை அன்று இரவு முழுவதும் மருத்துவமனையில் வைத்து கண்காணிக்க மருத்துவர் அறிவுறுத்தியதன் பேரில் நான் எனது மனைவியை எனது பாட்டியுடன் தங்க கூறிவிட்டு நான் சிவாவுடன் எனது வீட்டிற்கு வந்தேன்.

3. அன்று இரவு 11.00 மணிக்கு நாங்கள் வீட்டிற்கு வரவும் எங்கள் வீட்டு திண்ணையில் ஏறி நின்ற பால்பாண்டி எனது அத்தையின் (அ.சா.1) கையை பிடித்து இழுத்துக்கொண்டிருந்தார். எங்களை பார்த்ததும் பால்பாண்டி மேற்கு பக்கமாக சென்றுவிட்டார். நான் எனது அத்தையிடம் என்ன நடந்தது என்று கேட்டதற்கு எனது அத்தையிடம் ஆஜர் எதிரி காசு கொடுத்து வாடி புண்ட மவளே என்று படுக்க கூப்பிட்டதாக எனது அத்தை கூறினார். பின்னர் நாங்கள் எனது அத்தையை சமாதானபடுத்தினோம். அன்று இரவே 100 க்கு அழைக்கவும், அங்கு கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த ஒரு போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்.

4. அவரிடம் நாங்கள் நடந்த சம்பவம் பற்றி கூறினோம். அவர் மறுநாள் காலை வந்து எங்களை காவல்நிலையத்தில் புகார் அளிக்க அறிவுறுத்தினார். மறுநாள் காலை வெம்பக்கோட்டை காவல்நிலையத்தில் எனது அத்தை புகார் அளித்தார். அதில் நான் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். இந்த சம்பவம் எதனால் நடைபெற்றது என்றால் ஆஜர் எதிரி போதையில் இருந்ததே காரணம் என்று எனது அத்தை கூறினார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

5. நானும் என்னுடைய அத்தையும் வெம்பக்கோட்டை காவல் நிலையத்திற்கு எப்பொழுது சென்றோம் என்றால் 19 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு சென்றோம். ஆனால் மதியம் 2 மணிக்கு தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். புகாரை நான் தான் எழுதினேன் என்றால் சரிதான். புகாரை நான் வீட்டில் வைத்து எழுதி கொண்டு சென்றேனா என்றால் காவல் நிலையத்தில் வைத்து தான் எழுதினேன்.

6. 100 க்கு யார் போன் செய்தார் என்றார் நான்தான் போன் செய்தேன். இவ்வளவு நேரத்தில் போலீசார் என்னுடைய அத்தை வீட்டிற்கு வந்தார் என்றால் சுமார் 15 நிமிடத்தில் வந்து விட்டார். போலீசார் வரும்போது என்னுடைய அத்தையின் வீட்டிற்கு முன்பு எத்தனை நபர்கள் நின்று கொண்டு இருந்தார்கள் என்றால் சுமார் 6 நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அங்கு வந்த போலீசார் வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் இருந்து வந்தார்கள் என்றால் எந்த காவல் நிலையத்தில் இருந்து வந்தார்கள் என்று தெரியாது. வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறும் நேரத்திற்கு உடனே வெம்பக்கோட்டை காவல் நிலையத்திற்கு போன் செய்து கூறினேனா என்றால் வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் தொடர்பு எண் தெரியாது என்பதால் 100 க்கு போன் செய்து கூறினேன்.

7. என்னிடம் இருசக்கர வாகனம் இருந்தது என்றால் சரிதான். உடனடியாக காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுக்காமல் இருந்ததற்கு என்ன காரணம் என்றால் இரவு 11 மணி ஆகிவிட்டதால் செல்லவில்லை. என்னுடைய வீடு என்னுடைய அத்தை வீட்டில் இருந்து எவ்வளவு தூரம் தள்ளி இருக்கிறது என்றால் சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவு தள்ளி இருக்கிறது. எதிரி எந்த தெருவில் குடியிருக்கிறார் என்றால் அது எனக்கு தெரியாது. நாங்கள் குடியிருக்கும் மாரியம்மன் கோவில் தெருவில் எங்கள் சமூகத்தை சார்ந்த மக்கள் தான் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடைபெற்ற உடனையே எங்கள் தெருவில் உள்ள அனைவரும் கூடி விட்டார்களா என்றால் சுமார் ஆறு நபர்கள் கூறினார்கள்.

8. என்னுடைய அத்தையை எதிரி கையைப் பிடித்து இழுத்ததாக கூறும் விபரம் என்னுடைய அத்தை கூறி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடைபெற்ற விபரத்தை நான் என்னுடைய மனைவிக்கு தொலைபேசி மூலம் தகவல் கூறினேனா என்றால் உடனடியாக கூறிவிட்டேன். என்னுடைய மாமனாருக்கு எப்பொழுது தகவல் கொடுக்கப்பட்டது என்றால் நான் கூறவில்லை, என்னுடைய அத்தை கூறியிருப்பார். போலீசார் என்னை விசாரித்த போது எதிரி பால்பாண்டி என்னுடைய அத்தை வீட்டு திண்ணையில் ஏறி நின்று என்னுடைய அத்தையின் கையைப் பிடித்து இழுத்தார் என்று கூறினேனா என்றால் கூறினேன். வழக்கு சம்பவத்தின் போது எதிரி போதையில் இருந்தாரா என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

9. நான் கூறுவது போல் எதிரி என்னுடைய அத்தையிடம் காசு கொடுக்கிறேன் படுக்கவா என்று கூறவில்லை என்றாலும், கெட்ட வார்த்தை பேசி ஏசவில்லை என்றாலும் சரியல்ல. நான் கேள்விப்பட்டது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறும் நாளில் நான் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல.

10. எங்கள் ஊர் ஊராட்சி தேர்தலில் சுந்தரவல்லி என்பவர் தலைவர் பதவிக்கு

போட்டி போட்டார் என்றால் சரிதான். அவர் எனக்கு நெருங்கிய உறவினர் என்றால் சொந்தக்காரர் அவர். எனக்கு அவர் என்ன உறவுமுறை என்றால் அக்கா ஆகும். அவரை எதிர்த்து பத்மாவதி என்பவர் போட்டியிட்டார் என்றால் சரிதான். எதிரில் பத்மாவதிக்கு ஆதரவாக தேர்தலில் பணியாற்றியதால் சுந்தரவள்ளியின் தூண்டுதலின் பேரில் என்னுடைய அத்தை எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. என்னுடைய மைத்துனர் சிவா எங்களுடன் காவல் நிலையத்திற்கு வந்தாரா என்றால் வந்தார். அவரும் என்னுடைய அத்தை கொடுத்த புகாரில் சாட்சியாக கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். நாங்கள் காலை 07.00 மணியிலிருந்து மதியம் 02.00 மணி வரை வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதற்காக இருந்தபோது சிவாவும் எங்களுடன் இருந்தார் என்றால் சரிதான். அ.சா.1 என்னுடைய அத்தை என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றார் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Nov 4, 2025 4:59 PM

Judicial Magistrate 2, Sattur.